# 8. நூலகம்

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

கேள்வி 1.
நூல் இச்சொல் உணர்த்தும் பொருள்
அ) புத்தகம்
ஆ) கட்டகம்
இ) ஒட்டகம்
ஈ) கோல்
விடை:
அ) புத்தகம்

கேள்வி 2.
அறிஞர் இச்சொல் உணர்த்தும் பொருள்
அ) அறிவில் சிறந்தவர்
ஆ) கவிதை எழுதுபவர்
இ) பாடல் பாடுபவர்
ஈ) மருத்துவம் பார்ப்பவர்
விடை:
அ) அறிவில் சிறந்தவர்

கேள்வி 3.
தேனருவி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) தேன் + அருவி
ஆ) தே + னருவி
இ) தே + அருவி
ஈ) தேனி + அருவி
விடை:
அ) தேன் + அருவி

கேள்வி 4.
புத்துணர்ச்சி இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
அ) புதுமை + உணர்ச்சி
இ) புதிய + உணர்ச்சி
ஆ) புத்து + உணர்ச்சி
ஈ) புது + உணர்ச்சி
விடை:
அ) புதுமை + உணர்ச்சி

கேள்வி 5.
அகம் இச்சொல்லின் எதிர்ச்சொல்
அ) உள்ளே
ஆ) தனியே
இ) புறம்
ஈ) சிறப்பு
விடை:
இ) புறம்

கேள்வி 6.

தேன் + இருக்கும் இதனைச் சேர்த்து எழுதுக் கிடைக்கும் சொல்

அ) தேன் இருக்கும்

ஆ) தேனிருக்கும்

இ) தேனிறுக்கும்

ஈ) தேனி இருக்கும்

விடை:

ஆ) தேனிருக்கும்

## வினாக்களுக்கு விடை......யளி

கேள்வி 1.

நூலகத்தின் வேறு பெயர்கள் யாவை?

விடை:

நூல் நிலையம், புத்தகச் சாலை ஆகியவை நூலகத்தின் வேறு பெயர்கள் ஆகும்.

கேள்வி 2.

நூலகத்தின் பயன்கள் யாவை?

விடை:

நூலகத்தில் நமக்குத் தேவையான அல்லது பிடித்த நூல்களை எடுத்துப் படிக்கலாம்.

நூலகத்தில் உறுப்பினராகச் சேர்ந்தால் நூல்களை வீட்டிற்கே கொண்டு சென்றும் படிக்கலாம்.